**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.737/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராமு | த–பெ | மெய்யர் |
| ஊர்: | : | கண்டனூர் | சமயம்: | |
| வயது: | : | 40/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.04.2025**
**எதிரிகள் ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கண்டனூரில் வசித்து கூலி வேலை வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். வழக்கு பொருத்து எனக்கு எதும் தெரியாது போலீசார் என்னை விசாரணை செய்த போது வழக்கு சம்மபவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 28.05.2017 அன்று காலை 8.00 மணிக்கு வீட்டில் இருந்த போது சத்தம் கேட்டதாகவும் வெளியே சென்று பார்த்த பொழுது அ.சா.2 ஐ ஆஜர் எதிரிகள் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி செறுப்பால் அடித்து அங்கிருந்த கட்டையால் அ.சா.2 ஐ காயப்படுத்தியதாகவும், இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்து விலக்கி வைத்ததாகவும் சொல்லி விட்டு இப்பொழுது வழக்கு விசாரணையில் நேரடியாக பார்த்த சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. J.Karmegakanna.,B.A.B.L.,
Judical Magistrate, karaikudi

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.737/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்லாயி | க–பெ | கருப்பையா |
| ஊர்: | : | கண்டனூர் | சமயம்: | |
| வயது: | : | 45/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.04.2025**

**எதிரிகள் ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கண்டனுரில் வசித்து கூலி வேலை வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது கணவருக்கு ரூ.2500/– பணம் தரவேண்டியிருந்தது. அது தொடர்பாக பல முறை எனது கணவர் அவரிடம் கேட்டு அவர் கொடுக்காமல் இருந்து வந்தார். 28.05.2017 அன்று காலை 6.00 மணிக்கு நான் மட்டும் எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் கேட்டேன். பணம் தரமுடியாது என்று மறுத்துவிட்டார். பின்னர் எனது கணவரும் அங்கு சென்று எதிரியிடம் நாங்கள் கொடுத்த பணத்தை கேட்கிறோம் ஏன் தர மறுக்கிறிர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரி சீனியின் மைத்துனர் மகன் ராசு என்பவர் ஆபாசமாண வார்த்தைகளால் திட்டி பணம் தரமுடியாது என்று சொன்னர். கொடுத்த பணத்தை கேட்டதற்கு ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டதற்கு மற்றொரு எதிரியான சின்னம்மாள் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் என்னை திட்டினார். எதிரி சின்னம்மாள் என்னை செருப்பை எடுத்து அடித்தார். தடுக்க போன எனது கணவரை சீனி என்பவர் அங்கிருந்த கட்டையை எடுத்து அடித்தார். தடுக்க போன என்னையும் அதே கட்டையால் தலையில் அடித்தார். அதில் எங்கள் 2 பேருக்கும் இரத்த காயம் ஏற்பட்டது. அங்கு இருந்த நபர்கள் 108 ஆம்புலன்சில் தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்து வமணைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். மேலும் மேல் சிகிச்சைக்காக எனது கணவரை சிவகங்கை அரசு மருத்துவமணைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் மீண்டும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமணைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் இது தொடர்பாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சாக்கோட்டை காவல் நிலையம் சென்று எனது மகன் அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

Sd/. J.Karmegakanna.,B.A.B.L.,
Judical Magistrate, karaikudi

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.737/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டி | த–பெ | கருப்பையா |
| ஊர்: | : | கண்டனூர் | சமயம்: | |
| வயது: | : | 32/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கொத்தனார் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.04.2025**

**எதிரிகள் ஆஜர்.**

---

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கண்டனுரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எனது தகப்பனாருக்கு ரூ.2500/– பணம் தரவேண்டியிருந்தது. அது தொடர்பாக பல முறை எனது தகப்பனார் அவரிடம் கேட்டு அவர் கொடுக்காமல் இருந்து வந்தார். 28.05.2017 அன்று காலை 6.00 மணிக்கு எனது தாயார் மட்டும் எதிரியின் வீட்டிற்கு சென்று பணம் கேட்டார்கள். பணம் தரமுடியாது என்று மறுத்துள்ளார். பின்னர் எனது தகப்பனாரும் அங்ககு சென்று எதிரியிடம் நாங்கள் கொடுத்த பணத்தை கேட்கிறோம் ஏன் தர மறுக்கிறிர்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு எதிரி சீனியின் மைத்துனர் மகன் ராசு என்பவர் ஆபாசமாண வார்த்தைகளால் திட்டி பணம் தரமுடியாது என்று சொல்லியுள்ளார். கொடுத்த பணத்தை கேட்டதற்கு ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டதற்கு மற்றொரு எதிரியான சின்னம்மாள் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் எனது அம்மாவை திட்டியுள்ளார். எதிரி சின்னம்மாள் எனது தாயாரை செருப்பை எடுத்து அடித்துள்ளார். தடுக்க போன எனது தகப்பனாரை சீனி என்பவர் அங்கிருந்த கட்டையை எடுத்து அடித்துள்ளார். தடுக்க போன எனது தாயாரையும் அதே கடையால் தலையில் அடித்துள்ளார். அதில் 2 பேருக்கும் இரத்த காயம் ஏற்பட்டுவிட்டது. அங்கு இருந்த நபர்கள் 108 ஆம்புலன்சில் தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். மேலும் மேல் சிகிச்சைக்காக எனது தகப்பனாரை சிவகங்கை அரசு மருத்துவமணைக்கு அழைத்துச்சென்றுள்ளார்கள். பின்னர் மீண்டும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமணைக்கு அழைத்துச்சென்றுள்ளார்கள். நான் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த எனது தகப்பனாரை பார்த்தேன். பின்னர் இது தொடர்பாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சாக்கோட்டை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். புகார் **அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

Sd/. J.Karmegakanna.,B.A.B.L.,
Judical Magistrate, karaikudi